Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 02 (16 – 05 – 1991) வியாழக்கிழமை ஓசை: 87

## வினாத்தாள்வந்தபின்பே பரீட்சை பற்றி முடிவு

(யாழ்ப்பாணம்)

வினாத்தாள்கள் கையில் கிடைத்த பின்னரே பரீட்சை நடாத்துவது பற்றிக் கூறமுடியுமென பிரதம கல்வி அதிகாரி திரு. சிவானந்தன் தெரிவித்தார். வடக்குக் கிழக்கில் கடந்த 23 ஆம் திகதி முதல் நடைபெற்றுக் கொண்டிருந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சை கடந்த 16 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டது. தெரிந்ததே. இப் பரீட்சையைத் தொடர்ந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்த நிவாரண உணவிற்குப் பதில் பணம் வழங்க முயற்சி

## வடபகுதி அரச அதிபர்கள் கடும் ஆட்சேபம்

(நமது நிருபர்)

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை மேலும் தீவிரமாக்க சிறிலங்கா அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் ஒருகட்ட நடவடிக்கையாக தற்பொழுது பொருள்களாக விநியோகிக்கப்பட்டுவரும் நிவாரணக் கொடுப்பனவுகளை பணமாக வழங்க அத்தியாவசிய திணைக்களம் முயற்சித்து வருகின்றது. ஆனால், இம் முயற்சிக்கு வடபகுதி அரச அதிபர்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளதாக அறியவருகின்றது.

சிறிலங்காவின் இராணுவ நடவடிக்கைகளில் இடம் பெயர்ந்த தொழில் இழந்த மக்களுக்கும். இதேபோல மாதாந்தம் 1500 ரூபாவிற்கு கீழ் வருமானம் பெறும் மக்களுக்கும் இலவச உலர் உணவு வழங்கப்பட்டு வந்தது. அத்தோடு 1500 ரூபாவிற்கு அதிகமான வருமானம் பெறுவோருக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் உலர் உணவும் வழங்கப்பட்டுவந்தது.

ஆனால் தற்பொழுது கப்பல் மூலம் உணவுப்பொருள்களை ஏற்றி இறக்கும் செலவு, கூட்டுறவுச்சங்கங்களுக்கு ஊடாக பொருள்களை விநியோகிக்க ஏற்படும் செலவு என்பவற்றைக் காரணம் காட்டி இவ் உணவுப் பொருள் விநியோகத்தை அத்தியாவசிய திணைக்களம் நிறுத்துவதற்கு முயற்சிப்பதாகத் தெரியவருகிறது.

ஆனால் உண்மையில் இதுவட பகுதிக்கான உணவுப்பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்தும் திட்டமிட்ட பொருளாதாரத்தடை நடவடிக்கையின் ஒருவடிவம் இது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரிகள் இம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வயல் மீது ஷெல் தாக்கு

(சாவகச்சேரி)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினமிரவு ஏவப்பட்ட ஷெல் லொன்று சாவகச்சேரியில் உள்ள கல்வயல்என்னுமிடத்தில விழுந்து வெடித்ததில் இப் பகுதியிலுள்ள தேவநாயகம் என்பவரின் வீடு சேதமாகியது.

## 7000 ராணுவம் பங்குபற்றிய வவுனியா நடவடிக்கை

(கொழும்பு)

வவுனியா ராணுவ நடவடிக்கைகளின்போது ஏழாயிரம் சிறிலங்கா ராணுவத்தினர் பங்குபற்றினார்கள் என்று சிறிலங்கா ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர் என கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

கடந்த பதின்மூன்று நாட்களாக இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகளில் ஏழாயிரத்திற்கும் அதிகமான ராணுவத்தினர் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும் அப்பத்திரிகைகள் தெரிவித்தன.

## மன்னார் மாவட்டத்திற்கு முஸ்லிம் அரச அதிபர்?

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக ஜனாப் ஷரிவ் என்பவரை நியமனம் செய்வதற்கு இலங்கை பொது நிர்வாக அமைச்சின் தலைமை அலுவலக உயர் அதிகாரிகள் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரைகாலமும் செபநாயகம் என்பவர் அரச அதிபராக கடமையாற்றி வந்துள்ளார். இவரின் இடத்திற்கே மேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். புதிய அரச அதிபர் இன்று பதவி ஏற்கிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக நியமனம் பெற்ற திரு. கே. மாணிக்கவாசகர் இன்று காலை யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபருக்குரிய அலுவலகத்தில் தமது கடமையை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்கின்றார்.

எனினும் அடுத்த வாரம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபை செயற்பாடு பற்றி மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் போன்றவற்றின் செயற்பாடுகள் பற்றி மீளாய்வு செய்யும் பொருட்டு நேற்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்றுஇடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் அனைத்து நகர, பிரதேச சபைகளின் பிரதிநிதிகளும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கிற்கு விரைவில் தொலைதொடர்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் விரைவில் தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படும் என்று தொலைத் தொடர்புகள அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று தொலைத்தொடர்புகள் சட்டமூலத்தை சிறிலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றி உரையாற்றுகையில், தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஏ (4 ஆம பக்கம் பார்க்க)

## நோயாளர் பயணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைஇறங்குதுறையிலிருந்து முப்பத்திரெண்டு நோயாளிகளும் அவர்களது உதவியாளர்களும்நேற்று வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு சென்றனர்.

இவர்களுடன் ஒரு மருத்துவக் குழுவும் பயணமாகியது. (லோ)

## வீரவணக்கம்

### திலக்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வந்தாறுமூலையில் கடந்த மாதம் இருபதாம் திகதியன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் வீரவேங்கை திலக் (அழகையா ஜெயராஜ், வந்தாறுமூலை) என்பவர் வீரமரணமடைந்துள்ளார் இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## கிரானில் கண்ணிவெடி; இருபடை பலி; 4 பேர் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு கிரானில் நேற்றுபுலிகளின் கண்ணிவெடியில் சிக்கி சிறிலங்கா இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டதாகவும், நான்கு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.

## ஆனையிறவுப் பகுதியில் நேபாம் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவமுகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2:10 மணி தொடக்கம் 4 15 மணிவரை மூன்று குண்டு வீச்சு விமானங்கள், மூன்று உலங்கு வானூர்திகள், ஒரு அவ்ரோ விமானம் என்பன தாக்குதலை நடத்தியுள்ளன.

அவ்ரோ விமானம் பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளது இதில் அதிகமானவை நேபாம் குண்டுகள் எனத் தெரிய வருகிறது; (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சூட்டிற்கு தமிழ்ப் பொதுமகன் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் தமிழ்ப் பொதுமகனொருவர் கொல்லப்பட்டுள்ளார்

இம்மாதம் ஒன்பதாம் திகதி அன்று மாலை 7 30 மணியளவில் அக்கரைப்பற்று பனங்காடு என்னுமிடத்தில் விசேட அதிரடிப்படை முகாமுக்கு முன்பாகவுள்ள வீதியால் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நாடு கடத்தப்பட்ட தமிழர் 52 பேர் கொழும்பு வந்தனர்

(கொழும்பு)

யூகோஸ்லாவியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட ஐம்பத்தி ரெண்டு தமிழ் இளைஞர் யுவதிகள் கொழும்பு வந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை கொழும்பு வந்துசேர்ந்த இவர்கள் இத்தாலி செல்வதற்கு விசா இல்லாதபடியால் இலங்கைக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. நாடு கடத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டது.

வரிவிளம்பரம்

திரவசவர்க்காரம்

அதிசக்திவாய்ந்த மில்க்வைற் திரவ சவர்க்காரம் வீட்டுச் சலவைக்கும் ஏனைய சுத்திகரிப்புவேலைகளுக்கும் இல்லத்தரசிகளுக்கு உதவுகிறது எங்கும் கிடைக்கிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம். (B/2487)



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## பொது அறிவித்தல்

★ 93 உயர்தரப் பிரிவு எதனையும் ஆரம்பிக்க வேண்டாம் ஆரம்பிப்பது வருமான நோக்கை மட்டும் கொண்டிருப்பது என்பது தெளிவாகின்றது. இச் செயல் மாணவருக்கு பெருங்குழப்பத்தையும், தன்னம்பிக்கைக் குறைவையும் ஏற்படுத்தும். இச் செயலில் ஈடுபட வேண்டாம் என தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது.

★ திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் வகுப்புக்களை நடாத்துதல் ஒரு அத்து மீறும் செயலாகும். இதனை தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கண்டிப்பதுடன் இது பற்றிய தகவல்கள் சேகரித்தும் வருகின்றது.

- பொதுச் செயலாளர்

(R/ 1395)



## SRI LANKA RED CROSS SOCIETY,

***Jaffna Branch.***

Wanted an Instructor in English. Preference will be given to a Retired English Trained teachers with a knowledge of Stenography. Please apply before 20-05-91 and appear for an interview on 22nd May, 91 (1-00 p. m.) at our Office.

—Hony Secretary

73, Kandy Road,
Jaffna (B 2527)



## A/L 91 DAY CLASS

இப்பொழுது நடைபெறுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 8-30 | CHEM. | - பௌதிக + சேதன | திரு. சிவஜோதி |
| 9-30 | PHY. | - புலங்கள், மின்னியல் | திரு யோகதாசன் |
| 10-30 | PURE | - SOLID + திரிகோண கணிதம் | திரு. A. குணசிங்கம் |
| 10-30 | BOT. | - தாழ்தாவரங்கள் + உடற்றொழிலியல் | திரு. சதீஸ் |
| 11-30 | APPLIED. | - காவிகள் + இயக்கவியல் | திரு. A. குணசிங்கம் |
| 11-30 | ZOO. | - பொருளாதார விலங்கியல் + பிறப்புரிமையியல் | திரு. கெங்காதரன் |

**BOND** கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B-2516)



## ஆரம்ப சுகாதார கவனிப்பு அமைப்பாளர்/உதவிஅமைப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள்

- உடுப்பிட்டி

- கரணவாய் வடக்கு

விண்ணப்பதாரருக்கு இருக்க வேண்டிய தகைமைகள்:

1. **கல்வி:** க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சுகாதாரம், கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. **சுகாதாரப் பயிற்சி:** சுகாதாரத்தில் போதிய பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். (ஆரம்ப சுகாதார கவனிப்பு) முதலுதவி பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
3. சுகாதார வேலையில் அனுபவம் இருத்தல் வேண்டும்.(முக்கியமாகவெளிக்களவேலையில்)
4. துவிச்சக்கர வண்டியில் சென்று கடமை புரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. **வயதெல்லை:** 25 க்கு மேற்பட்டவர்கள்.
7. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் அல்லது அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
8. **விண்ணப்ப முடிவுத் திகதி:** 20 – 05 – 1991
9. **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
   செயலாளர்,
   இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
   73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

ச. சிவானந்தராசா,
செயலாளர்,
செஞ்சிலுவைச்சங்கம் - யாழ்கிளை,
14-05-1991
(B-2520)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

தீவக பாடசாலை மாணவர்களுக்கான

பகல் நேர வகுப்புக்கள். (8-00 — 11-00)

### ஆண்டு 11, 10, 9

ஆரம்பம்: 17-05 1991

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

விஞ்ஞானம் - திரு.J.R. சூரி
கணிதம் - திரு. ஜெகன்
ஆங்கிலம் - திரு.விஸ்வநாதன்
தமிழ் - திரு.சிவம் திருப்பதி
சமயம் - திரு. சங்கர்
வர்த்தகம், சமூகக்கல்வி - திரு. கோபி கருணாகரன்

மு கு கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும்.
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். (B-2511)



## ACCOUNTANCY CLASSES

**Nov. - Dec. 1991**

| | | | |
|---|---|---|---|
| C. I. M. A. | Stage I | 18th May, | 1991 |
| | Stage II | 1st June | 1991 |
| A. A. T. (London) | Stage I | 18th May, | 1991 |
| | Stage II | 1st June, | 1991 |
| | Stage III | 1st June, | 1991 |
| A. A. T. (Sri Lanka) | Stage I | 18th May, | 1991 |
| | Stage II | 1st June, | 1991 |
| I. A. B. | Foundation | 18th May, | 1991 |
| | Inter | 18th May, | 1991 |
| | Finals | 1st June, | 1991 |

மேலதிக விபரங்களுக்கு:

**North Ceylon Technical Institute**

14, St. Peter's Lane, HOSPITAL ROAD, JAFFNA.

(B. 2507)



## நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 16**

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் இயக்கச்சி - பளைப்பகுதியில் உலங்கு வானூர்தியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் உயிரிழந்த

12 பொதுமக்களை

இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

ஆண்டாண்டு தோறும் வருமிந்நாளில்
மாண்டு போனவர் நினைவுகள் மீளும்
சத்திய வேள்வியில் சிந்திய உங்கள்
ரத்தத்தில் சிவக்கும் இம்மண்!

கண்ணின் நீரதனைக் கொட்டுவதாலும்
மண்ணின் துயர்கள் மாறாது - காண்
துஞ்சாமல் துவளாமல் தொடரும் போரணியில்
அஞ்சாமல் முன்னேறு அணியணியாய்!

கல்லறை பெருகிடுதல் காலத்தின் நியதி
வெல்லும் வரையில் வெடிக்கும் போர் - சொல்
இம்மண்ணின் இனத்தின் மீட்சியொன்றே
நிம்மதிப் பெருமூச்சாய் நீளும்!

— கவிதை இனியவன்

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2521)

## சிந்தனைக்கு

அசைக்கமுடியாத உறுதியும், திடசித்தமும் கொண்டவன், உலகைத்தன் வழியில் தானே ஆக்கிக் கொள்வான்.

— யோஹன் கேத்தே

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 16.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# தேர்தல் முடிவும் பேச்சுவார்த்தையும்

"இலங்கையில் இம்மாத இறுதியில் யுத்த நிறுத்தம் வரலாம். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த சிறிலங்கா ஜனாதிபதி முன்னர் விதித்த நிபந்தனைகளைக் கைவிட்டுவிட்டார். கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' என தனது கொழும்புச் செய்தியாளரை மேற்கோள்காட்டி இந்திய வானொலி நேற்று முன் தினம் செய்தி வெளியிட்டது.

இச்செய்தியில் எவ்வளவு உண்மையுள்ளது என்பதை உடன் கூறமுடியாது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு யுத்த நிறுத்தம் தேவையாக இருக்கின்றது என்பது மட்டும் புரிகிறது. இம்மாத இறுதியில் நடக்கவிருக்கும் இந்தியத் தேர்தல், அடுத்த மாதம் ஆரம்பிக்க இருக்கும் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் என்பனவற்றோடு எதிர்பார்த்த இராணுவ வெற்றியை அடைய முடியாமை என்பன யுத்த நிறுத்தத்தையும், பேச்சுவார்த்தையையும் எண்ண வைத்திருக்கலாம்.

வடக்கை இதோ கட்டுப்பாட்டினுள் கொண்டு வருகிறோம் என இம்மாதத் தொடக்கத்தில் ஆரம்பித்த பெரும் எடுப்பிலான யுத்தம் எதிர்பார்த்த வெற்றியை சிறிலங்காவிற்கு கொடுக்கவில்லை. அதேவேளை பெரும் இழப்புக்களுடன்தான் திரும்பவேண்டியிருந்தது. இதனால் யுத்தத்தில் வெற்றி கிடைத்தது எனப் பறைசாற்றுவதற்கு எதுவித ஆதாரங்களும் இடைக்காதபோது ''மாத்தயா'' வின் பங்கரைப் பிடித்தோம், அழித்தோம் என செய்தி வெளியிட்டுக் கொண்டிருந்தன சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள். ஆயிரக்கணக்கில் இராணுவத்தினரையும், கோடிக்கணக்கில் செலவீட்டையும் கொண்டு நடத்தப்பட்ட பெரும் படைஎடுப்பு காட்டினுள் ஒரு பங்கரைப் பிடிப்பதற்கு என விளம்பரப்படுத்துவது கேலிக்குரியதாகும்.

இராணுவ மேலாதிக்கம் இடைக்காத நிலையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு இன்று அத்தியாவசியமாகத் தேவைப்படும்போர்நிறுத்தத்திற்கும், பேச்சுவார்த்தைக்கும் உள்ளூராட்சித் தேர்தல் முடிவை ஐ தே. கட்சி காரணமாகக் காட்ட முற்படலாம். ஆனால், உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரின் தேசிய இனப் பிரச்சினை பற்றி இடைக்கிடை பேசப்பட்டதாயினும் ஐக்கிய தேசியக்கட்சி திட்டவட்டமான முடிவு எதனையும் வைக்கவில்லை. இதனால் உள்ளூராட்சித்தேர்தலில் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக சிங்கள மக்கள் எதுவித தீர்ப்பும் வழங்கியதாகவும் இல்லை.

ஆகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெற்றி சிறிலங்கா அரசாங்கத்தை யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை என்பனவற்றுக்கு இட்டுச் செல்கின்றது என்பதை விட சிறிலங்காவின் நெருக்கடிகளே இட்டுச் செல்கின்றன என்பதே உண்மையாகும்.

மேலும், 'இலங்கை சுதந்திரம்' பெற்றதில் இருந்து தமிழர் மீது இடம்பெற்ற ஒடுக்கு முறையையும் போர் நடவடிக்கைகளையும் சிங்கள மக்களின் அனுமதியைப் பெற்றா சிறிலங்கா அரசாங்கங்கள் மேற்கொண்டன? தமிழர் மீதான ஒடுக்கு முறைக்கு மக்களை அரசாங்கங்கள் தூண்டினவே ஒழிய சிங்கள மக்கள் தமிழர் மீதான நடவடிக்கைக்கென வாக்குகள் அளிக்கவில்லை. இந்நிலையில் மக்களின் அனுமதி பெற்றுத்தான் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது சிங்கள அரசியல்வாதிகளின் பித்தலாட்டமாகும்.

கடந்த காலத்தைப் போன்றும் இன்றும் சிறிலங்காவிற்கு போர் நிறுத்தமும், பேச்சுவார்த்தையும் தேவையாகவும், அவசியமாகவும் இருக்கின்றது. ஆனால் தமிழர் அன்று போல் இன்றும் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், அன்றைய பேச்சுக்களின் முடிவில் தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள். அதற்கு அவர்கள் அன்றிருந்த பலவீன நிலை காரணமாக இருந்தது.

ஆனால் இன்றையநிலை அவ்வாறில்லை என்பது சிறிலங்கா அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். கடந்த முறையைப் போன்றே விடுதலைப்புலிகள் இன்றும் பலமாகவே இருக்கின்றார்கள். ஆகையினால் தமிழ் மக்களை ஏமாற்றவோ, ஏமாறவோ செய்யமுடியாது என்பதைப் புரிந்து கொண்டு யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை முயற்சிகளில் ஈடுபடுவது நல்லது.

# சிங்கள அரசியலில் தோல்வி காணும் குடும்ப ஆதிக்கம்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ஓய்வு பெற்று கட்சியின் ஆலோசகராக இயங்கப் போவதாகக் கூறியுள்ளார். உண்மையில் எதிர்கால அரசியலில் அவருக்குள்ள அவநம்பிக்கையின் வெளிப்பாடே இக்கூற்றாகும். சிங்கள அரசியலில் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளதை நாம் அவதானிக்கத் தவறக் கூடாது. சேனநாயக்கா, பண்டாரநாயக்கா, றத்வத்த குடும்பங்களே முழு இலங்கை அரசியலையும் குத்தகைக்கு எடுத்திருந்தன. ஆனால் அப்போக்கு இன்று

டாரவளையைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது எனவே சாதி, பிரதேசம் என்பன சிங்கள அரசியலில் முக்கிய இடம் வகித்துள்ளது என்பதை நாம் மறக்கக்கூடாது.

பண்டாரநாயக்கா குடும்பத்தை ஐ தே க. வுக்குள் சேனநாயக்கா குடும்பம் தோற்கடித்த போதிலும், ஐ தே. க வுக்குள் சேனநாயக்கா குடும்பமே மேலோங்கியது. ஏனைய குடும்பங்களால் முடியவில்லை. பண்டாரநாயக்கா குடும்பத்திற்கும், சேனநாயக்கா குடும்பத்திற்கும்

பெருமளவு மாறியுள்ளது. நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் சிறிமாவோ தலைமைக்கு விழுந்த அடி றத்வத்த குடும்ப ஆதிக்கம் தலையெடுக்க முடியாதென்பதைக் காட்டியுள்ளது.

சிங்கள அரசியலில் குடும்ப ஆதிக்கத்தின் வரலாறு எப்படி இருந்தது என்பதைச் சுருக்கமாக நோக்குவோமாயின் இன்றைய மாற்றத்தின் முக்கியத்துவத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். பண்டாரநாயக்கா குடும்பம் கரையோரச் சிங்களவர்களில் ''அதி உயர்'' சாதி சமூக அந்தஸ்தைக் கொண்ட ஒரு குடும்பம். சேனநாயக்கா,

இடையிலான போட்டியில் சேனநாயக்கா குடும்ப ஆதிக்கத்தை ஏற்று அதனுடன் ஒட்டவேண்டிய நிலையே ஜே ஆர். ஜெயவர்த்தனாவுக்கு ஏற்பட்டது. இதனால் ஐ தே. க. என்றால் சேனநாயக்கா குடும்பம், சு க. என்றால் பண்டாரநாயக்கா குடும்பம் ஆதிக்கம் செலுத்தியது.

டட்லி சேனநாயக்கா திருமணம் செய்யாதிருந்ததால் அவருக்கென ஒரு பரம்பரை வாரிசு உருவாக முடியாமல் போனது. ஆனால் டி. எஸ். சேனநாயக்காவின் இன்னொரு சகோதரனின் வாரிசான ருத்மன் சேனநாயக்கா ஐ. தே க. வுக்குள் டட்லியின்

ஜெயவர்த்தனா குடும்பங்களை விடவும் அது ''உயர்ந்தது''. சேனநாயக்கா, ஜெயவர்த்தனா, கொத்தலாவலை குடும்பத்தினர் பண்டாரநாயக்காவின் வீட்டுக்கு விஜயம் செய்தால் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தந்தை பண்டாரநாயக்கா மேற்குறிப்பிட்ட நபர்களை நிற்க வைத்தே கதைப்பாராம்.

இந்தக் குடும்ப ஆதிக்கப் போட்டியின் ஓரம்சமாகவே ஐ. தே. க. 1951 ஆம் ஆண்டு இரண்டாகப் பிளவுபட்டு பண்டாரநாயக்கா தலைமையில் சு. க. உதயமானது. பண்டாரநாயக்கா குடும்பத்திற்கு எதிரான இந்தப் போட்டியில் டி. எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஜே ஆர். ஜெயவர்த்தனா சேர். ஜோன் கொத்தலாவலை என்போர் ஓரணியில் நின்று எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைத் தோற்கடித்தனர்.

இவ்வாறாக ஐ தே. க. வுக்குள் பண்டாரநாயக்கா தோற்கடிக்கப்பட்டிருந்த போதிலும் சாதி, பிரதேச ரீதியில் பண்டாரநாயக்கா குடும்பம் பலம் நிறைந்ததாகவே இருந்தது. கரையோரத்தில் ''மிக உயர்'' சாதியினரான பண்டாரநாயக்கா கண்டியில் உள்ள ''மிக உயர்'' சாதியினரான றத்வத்த குடும்பத்தில் திருமணம் செய்து கொண்டார். இது கண்டி கரையோரத்தை இணைக்கும் ஓர் அரசியல் முயற்சியாகும். ஆதலினால் இத்திருமணத்தை அரசியற் திருமணம் என்றே அழைப்பதுமுண்டு. கண்டிச் சிங்களவரின் ஆதரவை வேண்டி டி. எஸ். சேனநாயக்காவும் ஒரு கண்டிச் சிங்களப் பெண்ணை மணந்திருந்தார். கொத்தலாவலையும் அவ்வாறே. பிரேமதாசாவும் பண்

மரணத்தின் பின்பு ஆதிக்கம் பெறக்கூடிய சூழல் ஒன்று தென்பட்டது ஆனால் ஜே. ஆர். இந்தக் கட்டத்தில் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து ருத்மன் சேனநாயக்காவை கட்சிக்கு வெளியே தூக்கிப் போட்டார். இதன் பின்பு ஐ. தே. க. வுக்குள் சேனநாயக்கா குடும்பத்தினரின் ஆதிக்கத்திற்கு இடமில்லாது போனது. ஜே ஆரின் இச் செயல்தான் பிற்காலத்தில் பிரேமதாஸாவுக்கு கதவைத்திறந்து விட்டது என லாம் ஜே ஆர். விரும்பி பிரேமாவுக்கு கதவு திறந்து விட்டார் என்றில்லை. இந்த வளர்ச்சியின் தர்க்கபூர்வமான போக்கு அவ்வாறு ஒரு நிலை தோன்ற வழிவகுத்தது.

பண்டாரநாயக்கா றத்வத்த குடும்ப ஆதிக்கத்தை எதிர்ப்பதில் முழுமுனைப்புடன் செயற்பட்டார். அதில் பிரேமாவை அணைத்துக் கொள்வது தவிர்க்கமுடியாதிருந்தது. றத்வத்த குடும்பத்தை 1977 இன் பின்பு சிர்குலைத்ததைத் தொடர்ந்து பிரேமதாஸாவின் வளர்ச்சிக்கு ஜே ஆர். பெரிதும் தடையாக இருந்தார் என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

பிரேமதாஸா ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் பெற்றமை என்பது ஒரு தற்செயல் நிகழ்வு இலங்கை-இந்திய ஒப்பந்தம், இதனால் நாட்டில் ஏற்பட்ட குழப்பம், ஜே. வி. பி யின் கை ஓங்கியமை, ஐ. தே. க. வுக்குள் ஏற்பட்ட அதிருப்தி, பயம் என்பன எல்லாம் சேர்ந்து பிரேமாவை ஜனாதிபதி வேட்பாளராக்கியது இப்படியான ஒரு சூழல் தான் ''சாதியாற் குறைந்த'' ஒருவரை வேட்பாளர் நிலைக்கு உயர்த்தியது.

ஜனாதிபதித் தேர்தலில் பிரேமாவுக்குக் கிடைத்த வெற்றி மோசடிக்கும் தடியடிக்கும்கிடைத்தவெற்றிதான். ஆனாலும் அந்த வெற்றியானது சாதி, குடும்ப ஆதிக்கத்திற்கு ஒரு பலத்த அடியாகும். பிரேமா குழப்பமான சூழலைப் பயன்படுத்தி பதவிக்கு வந்து, அந்தக் குழப்பத்தில் தன்னைத் தக்கவைத்ததன் மூலமும் ஒரு ''குறைந்த சாதிக்காரன்'' ஜனாதிபதியாக இருக்கலாம் என்ற மரபை விதாபித்து விட்டார்.

**சாரணன்**

றத்வத்த குடும்பத்திற்கு எதிராக ஜே ஆர். நிர்மாணித்திருந்த சில அத்திவாரங்கள் பிற்காலத்தில் பிரேமாவுக்குப் பெரிதும் பயன்பட்டுள்ளன. சிங்கள அரசியலில் குழப்பமும் பெரும் கொதிநிலையும் இப்போதில்லை. குழப்பம், கொதிநிலையில் ஜனாதிபதியான ஒருவர், தற்போது குழப்பம் கொதிநிலை தணிந்த சூழலில் நிகழ்ந்த தேர்தல் மூலமே தனது வெற்றி எவ்வளவு ஸ்திரமானது என்பதை எடைபோட முடியும். எனவே இன்றைய நிலையில் உள்ளூராட்சித் தேர்தல்களில் றத்வத்த குடும்பத்திற்குக் கிடைத்த தோல்வி குடும்ப ஆதிக்கம் இனிமேல் முன்னணிக்கு வர முடியாது என்பதையே இது காட்டுகின்றது

அரசியற் பொருளாதாரக் கண்ணோட்டத்திலும், வரலாற்றின் யதார்த்த வளர்ச்சிப் போக்கிலும் சாதி, குடும்ப ஆதிக்கம் வலுவிழந்துள்ளது என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

எனவே சிங்கள மக்களின் மத்தியிற்கூட சில நல்லம்சங்கள் நிகழ்ந்து விடுகின்றன. றத்வத்த குடும்பத்தின் தலை வாரிசு சிறிமாவோ தோல்வியுடன் ஓய்வு பெறட்டும்.

# நீதிமன்றத்தில் கூறுவது சத்தியத்திற்கு முரணானது

(லாகூர்)

அரசாங்கப் பணத்தை வீண் விரயம் செய்தார் என பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ மீதான வழக்கு செவ்வாயன்று லாகூர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணையின்போது சாட்சியம் அளித்த முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ ஒன்பதரைக் கோடி ரூபா செலவீடு சம்பந்தமாகதான் நீதிமன்றத்திற்கு விளக்கம் அளிக்க வேண்டியதில்லை எனத் தெரிவித்தார். அவ்வாறு விளக்கமளிப்பதுதான் பிரதமராகியபோது எடுத்துக்கொண்ட சத்தியப்பிரமாணத்திற்கு முரணானது எனவும் தெரிவித்தார்.

# பங்களாதேஷில் 5000 அமெரிக்க இராணுவம்

(வாஷிங்டன்)

பங்களாதேஷில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சூறாவளி அழிவினால் ஏற்பட்ட சிதைவுகளில் மீட்புப்பணிகளை செய்வதற்கு ஐயாயிரம் அமெரிக்க இராணுவத்தினர் பங்களாதேஷிற்கு ஒரு சரக்கு விமானத்தில் உதவிப் பொருள்களுடன் சென்று இறங்கி உள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்காவும், சோவியத்தும

# இஸ்ரேலின் அங்கீகாரமின்றி மாநாடு கூட்டக்கூடாது

(டெல் அவிவ்)

இஸ்ரேலின் அங்கீகாரமின்றி அமெரிக்காவும், சோவியத் யூனியனும் மத்தியகிழக்கு விவகாரம் குறித்த சமாதான மாநாட்டை நடாத்தக் கூடாதென இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

கடந்த திங்கள் அன்று இஸ்ரேலிய வெளியுறவு அதிகாரி ஒருவர் இதுபற்றிக தெரிவிக்கையில் சோவியத் யூனியனும், அமெரிக்காவும் இது பற்றிய விடயத்தில் தமது அங்கீகாரமின்றி மத்தியகிழக்கு சமாதான மாநாட்டை நடாத்தக் கூடாதெனத் தெரிவித்தார்.

சீன - சோவியத்

# எல்லைப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும்

(பீக்கிங்)

சீன - சோவியத் எல்லைப் பிரச்சினைகள் விரைவில் சுமுகமான முறையில் தீர்க்கப்படுமென இரு நாடுகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

நேற்றுபீக்கிங் விமானநிலையத்தில் செய்தியாளர்களின் மத்தியில் பேசிய சீன கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் சியாங் சீன - சோவியத் கிழக்கு எல்லைகள் முழுவதற்குமான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை மொஸ்கோவில் சோவியத் வெளியுறவு அமைச்சர் சீன - சோவியத் எல்லைப்பகுதிகளில் இராணுவத்தின் அளவைக் குறைப்பது குறித்த பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கும் இடையே நடைபெறுவதாகத் தெரிவித்தார். இந்தப் பேச்சுக்களின் மூலம் எல்லைப்பகுதிகளில் இராணுவப் பகைமை நடவடிக்கைகளை அகற்ற முடியும் என்றும் தெரிவித்தார்.

அணுவாயுத அழிப்பிற்கு

# அணுசக்தி நிபுணர் குழு

(பாக்தாத்)

வளைகுடாப் போரை முடிவுக்குக் கொண்டுவந்த ஒப்பந்தத்திற்கு ஏற்ப ஈராக்கின் அணுவாயுதங்களையும், அணு ஆயுத சாதனங்களையும் இனங்கண்டறிந்த பின்னர் அவற்றை அழிப்பதற்கான அணுசக்தி நிபுணர்கள் குழு ஒன்று பாக்தாத் சென்றுள்ளது. இந்த நிபுணர்குழுவில் இடம்பெறும் பலர் சர்வதேச அணுசக்தி ஏஜன்சியைச்சேர்ந்தவர்கள்.

## ஈராக் விஜயம்

இக்குழுவினர் ஈராக்கின் வெளியுறவு அமைச்சக அதிகாரிகளுடன் நேற்றுபேச்சு நடத்தினர்.

# தேர்தல் பிரசாரத்தில் பர்னாலா

(சென்னை)

தேசியமுன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பிரசாரம் செய்வதற்கு முன்னாள் தமிழ் நாட்டு ஆளுனர் பர்னாலா நேற்று சென்னை வந்தார்.

அவருக்கு விமான நிலையத்தில் தி.மு.க. கட்சியினர் வரவேற்பளித்தனர்.

# பேக்கர் அமெரிக்கா திரும்பினார்

சுருக்கமான மத்திய கிழக்கு விஜயத்தைமுடித்துக்கொண்டு அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் ஜோர்தான் தலைநகர் அம்மானில் இருந்து நேற்று வாஷிங்டன் பயணமானார். இதற்கு முன்பாக இஸ்ரேலிலிருந்து மேற்குக்கரைப்பகுதியூடாக மோட்டார்காரில் பயணம் மேற்கொண்டு திரு. ஜேம்ஸ்பேக்கர் அம்மான் வந்திருந்தார். மிக முக்கியமான பகுதியான மேற்குக்கரைப் பிரதேசத்தைப் பார்வையிடுவதற்காகவே மோட்டார் காரில் பயணம் செய்ததாக ஜேம்ஸ்பேக்கர் செய்தியாளரிடம் குறிப்பிட்டார்.

இராணுவத்தின்

இரண்டு தமிழ் பொதுமக்கள் சென்றுகொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் தமிழ்பொதுமகனொருவர் கொல்லப்பட்டுள்ளார் மற்றவர்தப்பியோடிவிட்டார்.

ஆனையிறவுப்

ஹெலிகளில் இருந்தும் கலிபாதிதாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை இம்முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. சேதவிபரம் கிடைக்கவில்லை.

வினாத்தாள் வந்து

நடாத்துவதற்கான வினாத்தாள்கள் இங்கு வந்து சேராததே இதற்குக் காரணமென தெரிவிக்கப்பட்டது. கப்பல் மூலம் வினாத்தாள்கள நேற்று வந்து சேருமென எதிர்பார்க்கப்பட்டது

ஆயினும் நேற்று மாலை வரை குறிப்பிட்ட கப்பல் இறங்குதுறையை வந்தடையவில்லை. இந்நிலையில் பரீட்சை எப்போ ஆரம்பமாகுமென நிருபர் கேட்டதற்கே கல்வி அதிகாரி மேற்கண்டவாறு பதிலளித்தார். (ச)

மன்னார்

படி நபரை நியமிப்பதில்இந்த அமைச்சு அதிகாரிகள் அதிக அக்கறையாக உள்ளனர்.

பொதுநிர்வாக அமைச்சில் வாராந்தம் நடைபெறும் அதிகாரிகள் மட்டத்திலான கூட்டங்களில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக ஜனாப் ஷரிவ் என்பவரையே நியமிக்க வேண்டும் என்றுபல முனைகளில் இருந்தும் அழுத்தம் கொடுக்கும்வகையிலான கருத்துக்கள்முன்வைப்பதற்கு இந்த அமைச்சின் அதிகாரிகள் தவறுவதில்லை என்று அங்கிருந்து எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

வடக்கு

எம் எஸ். அதிகாரி இவ்வாறு கூறினார்.

இந்தச் சட்டமூலம் நடைமுறைக்குவருவதால் தொலை தொடர்புகள் அமைச்சின் அதிகாரத்தில் இருந்த தொலைத் தொடர்புகள பகுதி கூட்டுத்தாபனமாக மாறறப்பட்டுள்ளது மேலும் உள்ளூரிலேயே தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்தவும் இச்சட்ட மூலம் அங்கீகாரமளிக்கிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# இலங்கையைத் தாக்காது

வங்காள விரிகுடாவிற்கு தென்கிழக்காக உருவாகி வரும் சூறாவளி இலங்கையைத் தாக்கக் கூடும் என்று பங்களா தேஷைச் சேர்ந்த காலநிலை நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால இலங்கையைச்சேர்ந்த வானிலை கணிப்பாளர் இது குறித்துத் தெரிவிக்கும்போது இலங்கை மிகத்தூரத்தில் இருப்பதால் இந்த சூறாவளியின் தாக்கத்திற்கு இலக்காக மாட்டாது எனக் கூறினார்.

## கருத்தரங்குகள்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படும் இலங்கை அதிபர் சேவை தரம் I, II, III போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்குகள் வரும் 18ஆம், 19ஆம திகதிகளில் சனி, ஞாயிறு கிழமைகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இக் கருத்தரங்குகள் காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி ஏ சிவானந்தன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

★ ★ ★

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க ஆதரவில் கலாநிதி. பா. சிவகடாட்சம் அவர்களால் நாளை 17ஆம் திகதி 3.00 மணிக்கு ''சுதேச வைத்தியத்தில் மூலிகைகளின் பங்கு'' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு ஒன்று பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில நடைபெறவுள்ளது. அனைவரும் இக் கருத்தரங்கில் சமூகம் தருமபடி வேண்டப்படுகின்றனா.

## பொதுக்கூட்டம்

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தின்அனைத்து அங்கத்தவர்களுக்குமான பொதுக்கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 4.00மணிக்கு பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் தருமாறு கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

நிவாரண

முயற்சிக்கு வடபகுதி அரச அதிபர்கள் முற்றாக மறுப்புத் தெரிவித்துவிட்டதாகவும் தெரியவருகிறது. இவர்கள் இத்திட்டத்துக்கு மறுப்புத் தெரிவிக்கையில் தற்போதைய இக்கட்டான சூழலில் ஐந்து பேர்கொண்ட ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் 315 ரூபாவை வைத்து கொண்டு எந்த ஒரு பொருளையும் வாங்குவது மக்களுக்கு மிகவும் கஷ்டமானதாகும் என்றும் இது பட்டினி நிலைக்கே மக்களை இட்டுச்செல்லும் என்பதையும எடுத்துக்கூறியதாகவும்எமக்குததெரியவந்துள்ளது

தமது மாவட்டத்தில இத்திட்டததினை அமுல்படுத்த மட்டக்களப்பு அரச அதிபரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிகிறது.

மேலும் அவர் தமது எதிர்ப்பின்போது தம்மால் மட்டக்களப்பு மாவட்ட கிராமப்புறங்களுக்குச் செல்லமுடியாது உள்ளது என்று கூறிவிட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

(க), (லோ)

யாழ். புதிய அரச

முதலை அலுவலகத்தின் வழமையான அலுவல்களைக் கவனிப்பார் என்றும் அதுவரையில் முன்னைய கிளிநொச்சி அலுவலகத்துக்குச் சென்று திரும்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய அரச அதிபராக திரு பொன்னம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்ளூராட்சி

கலந்து கொண்டனர். கடந்த காலங்களில் இச்சபைகளின் செயற்பாடுகளைப்பற்றியும் தற்போதும் எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளைப் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

(க)

# ஓய்வூதியத் திட்டத்தில் தமிழ் மீனவர் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

மீனவர்களுக்கான ஓய்வூதியத்திட்டததில் வடபகுதி மீனவர்கள் புறக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் தமது வாழ்க்கைக் காலத்தின் இறுதியில் இதுவரை காலமும எதிர்நோக்கி வந்த பொருளாதார கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் முகமாக மீன்பிடித் துறை அமைச்சும் ஓய்வூதியத் திணைக்களமும இணைந்துஇவ்வாண்டு அறிமுகப்படுத்திய மேற்படி ஓய்வூதியத்திட்டம் நாட்டின் வடபகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது ஆனால் வடபகுதியில் உள்ள மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகங்கள் எதற்கும் மேற்படி ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அறிவித்தல்களோ அல்லது இது தொடர்பான சுற்றறிக்கைகளோ அனுப்பிவைக்கப்படவில்லை. இதன்மூலம் இப்பகுதியிலுள்ள மீனவர்கள் இத்திட்டத்தில் இருந்து தவிர்க்கப்பட்டு புறக்கணிப்புச் செய்யப்பட்டு வருகின்றனர். (க)

# பாதிக்கப்பட்ட மீனவருக்கு உதவியளிக்கும் திட்டம்

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க பகுதியினருக்கு 1991 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சுமார் பதினைந்துலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இப்பணத்தைப் பயன்படுத்தி மேற்படி பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான இந்த உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அதிகம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வருமானத்தைக் கொடுக்கக் கூடியவகையிலான உபகரணங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

# கையிருப்பில் உணவில்லை; விநியோகம் பாதிப்பு

(கிளிநொச்சி)

கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கத்தில் உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாததால் பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முதற்தடவைக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை. இது தவிர அகதிகளுக்கான நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கும் களஞ்சியத்தில் உணவுப்பொருள்கள் இல்லை.

கிளிநொச்சிக் கச்சேரியில் உணவுப்பொருள்கள் விநியோகம் சம்பந்தமான கூட்டம் ஒன்று நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றி வந்த மேற்படி சங்க லொறிகள் வவுனியாவில் பல நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த லொறிகள் வந்தால் உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என்றும் தங்களது லொறிகள் உணவுப்பொருள்களை கொழும்பிலிருந்து ஏற்றிக் கொண்டு வரும்போது ஐ. சி. ஆர். சி. பாதுகாப்பு அளித்தால் வழியில் இராணுவத்தால் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க முடியும் எனவும் மேற்படி சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார். (49)

# கிளிநொச்சி மாவட்டத்திற்கு உணவு போதாது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு மாதாமாதம் வரும் 230 மெற்றிக் தொன உணவுப் பொருள்கள் போதாது. இத்தொகை 260 மெற்றிக் தொன்னாக அதிகரிக்கப்படவேண்டும் என கிளிநொச்சி பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் கோரி உள்ளனர்.

அண்மையில் கிளிநொச்சிக்கான உணவுப்பொருள்கள் வலைப்பாடு இறங்கு துறைக்கு வந்திறங்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஜோ)

# ஜெய்ப்பூர் நிலையத்தில் வண்டிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

உடல் ஊனமுற்ற இருவருக்கு சமூகநலன் விரும்பிகள் இருவர் இரண்டு சக்கர தள்ளு வண்டிகளை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

ஜெயப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையில் உற்பத்தியாக்கப்பட்ட இந்த இரு வண்டிகளையும் திருமதி சிவப்பிரகாசம் என்பவரும் உடுவில் வாசி ஒருவரும் கொள்வனவு செய்து ஊனமுற்றவர்களான நா. வள்ளிநாயகி (வயது 14)என்பவருக்கும் வே. தேவதாஸ் (வயது 40) என்பவருக்கும் அன்பளிப்பாக வழங்கினர்.

இவ் வைபவம் நேற்று ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிலகத்தில் இடம் பெற்றது இத் தள்ளுவண்டி ஒன்றின் பெறுமதி 3,500 ரூபா என்பதுகுறிப்பிடத்தக்கது. (ச

# நேபாளத் தேர்தலில் காங்கிரஸ் முன்னணியில்

பொதுத்தேர்தலில் இது வரை அறிவிக்கப்பட்ட 165 இடங்களுக்கான முடிவுகளில் 83 இடங்களைப் பெற்று நேபாள காங்கிரஸ்கட்சி முன்னணியில் உள்ளது நேபாள கம்யூனிஸ்ட் கட்சி 61 இடங்களைபெற்றுள்ளது. 205 உறுப்பினர்களைக் கொண்ட நேபாள பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கு இன்னும் 25 இடங்களை நேபாள காங்கிரஸ் பெறவேண்டியுள்ளது.

## தற்கொலை

குடும்பத்தகராறு காரணமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜா சரோஜினி (வயது 25) என்பவர் தற்கொலை செய்துள்ளார்.

அலரிவிதை உட்கொண்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்ட அவர் நேற்றிரவு மரணமானார்.